விலை: 30.00
பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 267 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 27 திங்கட்கிழமை (12.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## திருக்கோணேஸ்வரர் ஆலய நில அபகரிப்பை உடனடியாகக் கைவிட வேண்டும்

### நேற்று நடந்த கூட்டத்தில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதைத் தடுக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நேற்று விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

நல்லூரில் உள்ள இந்துமாமன்றத்தின் பிராந்திய அலுவலகத்தில், சிவபூமி அமைப்பின் நிறுவுனர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமை 04

## மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரிப்பு



(கொழும்பு)

கடந்த நாட்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தங்களது விவசாய நிலங்கள் பாதிக்கப் 04

## வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவ முன்வந்தது கனடா

(ஒட்டாவா)

இலங்கையின் தற்போதைய பொருளாதார பின்னடைவு காராணமாக பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை சேர்ந்தவர்களுக்கு உதவ கனடா முன்வந்துள்ளது.

குறிப்பாக, பெண்களினால் முன்னெடுக்கப்படும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையிலான தொழில்நுட்ப ஆலோசனைகள் உள்ளிட்ட உதவி ஒத்தாசைகளை கனடா 04

# இலங்கைக்கு அமெரிக்கா முழு ஆதரவளிக்கும்

### ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது சமந்தா பவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முழுமையான ஆதரவை வழங்க அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)



## அத்தியாவசிய மருந்துகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு

### அரச மருந்தாளர் சங்கம்

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகள் உட்பட 60 இற்கும்மேற்பட்ட மருந்து வகைகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் 04

## முடிந்தால் கட்சியில் இருந்து எம்மை நீக்கிக் காட்டுங்கள்

### ர்ராஜபக்ஷ தரப்புக்கு டலஸ் அணி சவால்

(கொழும்பு)

"உண்மையான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்கள் நாங்கள்தான். - முடிந்தால் கட்சியில் இருந்து எங்களை நீக்கிக் காட்டுங்கள்."

என ராஜபக்ஷ தரப்புக்கு பகிரங்கமாக சவால் விடுத்துள்ளது டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். 04

## அடுத்த தேர்தலில் ஆட்சி எமதே

### சஜித் சூளுரை

(கொழும்பு)

அடுத்த பொதுத் தேர்தலில் அதிகூடிய ஆசனங்களைப் பெற்று ஆட்சியை கைப்பற்றுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் 04

## சுருட்டு புகைக்க மூட்டிய தீயில் எரிந்து மூதாட்டி பலி

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

சுருட்டை புகைப்பதற்காக தீமூட்டிய வயோதிப மாது தீயில் எரிந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

சுருட்டு புகைக்கும் பழக்கமுடைய மூதாட்டி ஒருவர் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீக்குச்சியை எடுத்து சுருட்டை பற்றவைக்க தீமூட்டிவிட்டு அதனை அணைக்காது எறிந்துள்ள நிலை 04

**வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களே!**

**தெரு நாய்களைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.**

## ஆசிய கிண்ணத்தை 6 ஆவது தடவையாகவும் கைப்பற்றியது இலங்கை



12ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடு செல்ல முயன்ற 85 பேர் கைது

08 ஐ பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அமைச்சர் கிளிநொச்சிக்கு விஜயம்



(கிளிநொச்சி)

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பூநகரிப் பிரதேசத்தில் உள்ள தெளிகரை குளம் மற்றும் நொச்சிக்குளத்தை புனரமைக்கும் வேலைகளை அவர் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த இரண்டு குளங்களும் உலக வங்கியின் 68.59 மில்லியன் ரூபாய் செலவில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியில் 33 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் மூன்றாவதாக இரணைமடு சந்தியிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு குறித்த நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் உற்பத்திகளை பார்வையிட்டார். (4-316)

# நாட்டிற்கு கிடைக்கும் பணத்தில் 40 வீதம் கொள்ளையிடப்படுகிறது

## உலக வங்கி தகவல்

(கினிகத்தேன)

**இலங்கைக்கு கிடைக்கும் பணத்தில் 40 வீதம் கொள்ளையிடப்படுவதாக உலக வங்கி கூறுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.**

கினிகத்தேன நகரில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா தொகுதியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க போன்றவர்கள் தமது ஆட்சியின்போது மக்கள் பணத்தை கொள்ளையிடவில்லை.

ராஜபக்ஷ குடும்பமே நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னர் எமது நாடு பயங்கரமான இடத்தில் உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் திருடர்களுடன் இணைந்து செல்கிறார். அவரால் அவர்களுடன் ஒன்றாக இணைந்து செல்ல முடியாது. ரணில் விக்கிரமசிங்க வரிசைகளை இல்லாமல் செய்துள்ளதாகக் கூறுகிறார்.

வரிசைகள் முடியவில்லை. எரிபொருளை கொள்வனவு செய்ய பணம் இல்லை என்பதே பிரச்சினை எனவும் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (4)

# நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் மாந்தை கிழக்கு விவசாயிகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் ஆண்டு சிறுபோக நெற்செய்கையை வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழ் ஈடுபட்டிருந்தனர்.

விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லை உரிய விலைகளில் சந்தைப்படுத்த முடியாத சூழ்நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஏக்கர் ஒன்றின் அறுவடைக்காக இயந்திரக் கூலியாக பதினைந்தாயிரம் ரூபாயுடன் அதற்காக செலவாகும் டீசலையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால்கமநல சேவை நிலையத்தின் ஊடாக ஏக்கருக்கு 10 லீற்றர் டீசல் வழங்கப்படுகின்றபோதிலும் கிடைக்கின்ற டீசலானது போதுமானதாக இல்லை. நாற்பதாயிரம் ரூபாயுக்கு உரத்தினையும் அதிகூடிய விலைகளில் களைநாசினிகளையும் வாங்கிப் பயன்படுத்தி விவசாயத்தை செய்து உரியவாறு அறுவடை செய்ய முடியாமல் இருப்பதுடன் அறுவடை செய்த நெல்லை அதாவது 75 கிலோ எடைகொண்ட மூடை ஒன்றை ஏழாயிரத்து நாநூறு ரூபாயுக்கே விற்பனை செய்யும் நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலைமை நீடிக்கும் பட்சத்தில் விவசாய செயற்பாடுகளை மட்டுப்படுத்திச் செய்யும் நிலைமைதான் உருவாகும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (4-315)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலய இந்து இளைஞர்கள் நடத்தும் மஞ்சவனப் பதி முருகன் ஆலய 20ஆவது தின அலங்கார உற்சவம் இன்று 12 ஆம் திகதி இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது புல்லாங்குழல் கச்சேரி, நாத சங்கமம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4)

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(கந்தளாய்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர்ப்பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை விறகு எடுக்கச் சென்றவர் மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததனால் அவரை தேடிச் சென்றவேளையிலேயே ஈச்சக்குளத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார். (4)

# ஜெனிவா சென்றடைந்தார் யாழ்.மாநகர முதல்வர்

ஐக்கியநாடுகள் சபையின் 52 ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடர் சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் இன்று ஆரம்பமாகிறது.

இதனை முன்னிட்டு இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் முன் அமைந்துள்ள முருகதாசன் திடலில் இன்று பிற்பகல் 2 மணியளவில் ஒன்றுகூடல் ஒன்றும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இவற்றில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்று ஜெனிவா விமான நிலையம் சென்றடைந்துள்ளார். (4-18)


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவிலையும்
பிரதேச சபையையும் அண்மித்த பகுதியில் 6
பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம்
( 3 பரப்பாகவும் பிரித்து தரப்படும்.)
(12757)

077 538 4132
070 617 2892



## முதலாம் ஆண்டு நினைவலை...

முத்துக்குமாரு
மோகன்குமார்



தோற்றம்: 1972.11.29
மறைவு 2021.08.24

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்றல்ல
ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும்
நம்மைவிட்டு நீங்காது.

(12759)
தகவல்: குடும்பத்தினர்



## மூதாளர் அன்பு இல்லத்தில் முதியோரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

சைவத் தமிழ்ச்சங்கம் - அருள்மிகு சிவன் கோவில்
அன்பே சிவம் அறக்கட்டளை
சிவபுரவளாகம் - மூதாளர் அன்பு இல்லம்
மூதாளர் அன்பு இல்லத்தில் இணைந்து
வாழ விருப்புடையோர்
" பெற்றோரைப் பேணுதல் பிள்ளைகளின் கடமை"

- இல்லத்தில் வாழ்வதற்கு 60 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட தனித்து வாழும் மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பங்களை A9 வீதி, முகமாலை சிவபுர வளாகத்தில் பெற்று 30.09.2022 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.
- விண்ணப்பம் அனுப்ப வேண்டிய


முகவரி : (12758) தொடர்புகளுக்கு:

நிறைவேற்றுப் பணிப்பாளர்
சிவபுர வளாகம்
A-9 வீதி, முகமாலை, பளை.

நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு.குமரேசன் குமணன்
077 622 4038/ 077 617 1397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷனி ஆலய ஆவணி மாத மாலையம்



(அராலி)

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நயினை நாகபூஷனி ஆலயத்தின் ஆவணி மாதத்திற்கான மாலையம் என அழைக்கப்படும் மஹாளயபக்ஷரம்ப உற்சவம் நேற்று மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இவ் உற்சவம் நேற்று ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி அன்று நிறைவடையும்.

இவ் உற்சவத்தில் நயினாதீவு நயினை நாகபூஷனி அம்மனுக்கு விஷேட அபிஷேசங்கள், ஆராதனைகள் இடம்பெற்று, வசந்தமண்டபத்தில் இருந்து எழுந்தருளி வெளி வீதியூடாக இடப வாகனத்தில் வீற்று பக்தர்களுக்கு நாகபூஷனி அம்மன் அருள்பாலித்தார். (4-104)

# அம்புலன்ஸ் சாரதியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற நோயாளர் காவு வண்டி சாரதியை தாக்கியவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து. நோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதன் போது வீதியில் நோயாளர் காவு வண்டியை இடைமறித்த அதே பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு தப்பிச் சென்றுஇருந்தார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சாரதியை தாக்கியதாக இளைஞன் ஒருவரை கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அதனை அடுத்து மன்று குறித்த இளைஞனை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (4-33)

# கையெழுத்து போராட்டத்தின் 2 ஆம் நாள் யாழில் நேற்று முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் தீவகம் வேலணையில் ஆரம்பமான குறித்த ஊர்திவழிப் போராட்டம் 25 மாவட்டங்களுக்கும் சென்று அம்பாந்தோட்டையை சென்றடையவுள்ளது.

வேலணையில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களிற்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

• இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கையின் இரண்டாம் நாள் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-60)

# கைதடி கமநல சேவை நிலையத்தால் இரண்டாம் கட்ட டீசல் விநியோகம்

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான இரண்டாம் கட்ட டீசல் விநியோகம் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் என கமக்கார அமைப்புக்கள் தெரியப்படுத்தியுள்ளன.

எனவே குறித்த கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் 2022/23 காலபோகத்திற்கான இரண்டாம் கட்ட டீசலை பெறுவதற்காக தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் ஏக்கர் வரிச்சிட்டை ஆகியவற்றுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

காலபோக செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முதற்கட்டமாக ஏக்கருக்கு 8 லீற்றர் என்ற அடிப்படையில் டீசல் வழங்கப்பட்ட நிலையில் தற்போது இரண்டாம் கட்டமாக உழவுக்கான மேலதிக டீசல் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# நவாலியில் நால்வர் வாள்களுடன் கைது

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி பகுதியில் நான்கு இளைஞர்கள் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 20-23 வயதிற்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மானிப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-104)

# கைதடியில் விபத்து இளைஞன் படுகாயம்


(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வேளையில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பட்டாரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 30 வயதான இளைஞன் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# ரணில்-சமந்தா பவர் நேற்று சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு அமரிக்கா இந்த தருணத்தில் உதவி செய்யும் என்ற நிலையில், எதிர்காலத்தில் இலங்கையின் நெருக்கடி தொடர்பில் தமது கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதேநேரம் இந்தியாவுடன் இலங்கை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதோடு பல்வேறு மட்டத்தினருடனும் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)



156 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி பொலிஸாரால் நேற்று முன்தினம் நடமாடும் மருத்துவ சேவையும் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதேச இளைஞர்கள் ஆர்வத்துடன் இரத்ததானம் வழங்கினர். (படம்: கஜிந்தன்)

## மோ.சைக்கிளிலிருந்து தவறி விழுந்து பெண் பலி

(திருமலை)

திருகோணமலை-வான் எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆயிலியடி சந்தியில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறுதலாக கீழே விழுந்து குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த குறித்த பெண்ணின் சடலம் உடல்கூற்றுப் பரிசோதனைக்காகக் கிண்ணியா தள மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (4)



மகாகவி பாரதியாரின் 101 ஆவது நினைவேந்தல் நிகழ்வு வட்டுக்கோட்டை குக் வீதியில் அமைந்துள்ள பாரதியாரின் சிலைக்கு முன்னால் நேற்று நடைபெற்றது. இதன்போது பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்: கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுருட்டு...

யில் அவரது ஆடைகளில் தீபரவல் ஏற்பட்டுள்ளது.

இதனை அவதானித்த உறவுகள் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். இந் நிலையில் மூதாட்டி சிகிச்சை பலனின்றி நேற்றுப் பிற்பகல் மரணமடைந்துள்ளார்.

வல்வெட்டித்துறை திரைவளவை சேர்ந்த பவளம் கிருஷ்ணசாமி என்கின்ற 83 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். (4-60,316)

## வடக்கு-கிழக்கு...

வழங்கும் என, இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டெனியல் பூட் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கை - கனடா வர்த்தக சபையின் 31ஆவது வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை, வர்த்தக அமைப்புக்கள் கனேடிய வர்த்தக அமைப்புடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக வருவாயையும் ஏற்படுத்த முடியும் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டெனியல் பூட் குறிப்பிட்டார். (4)

## இலங்கைக்கு...

இரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள சமந்தா பவர், நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, தற்போதைய அவசரநிலையால் இலங்கை மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் இந்த நிலையில் இருந்து மீள்வதற்கு அமெரிக்கா எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க முடியும் என்பது குறித்தும் சமந்தா பவர் இதன்போது கலந்துரையாடினார்.

அத்துடன், இலங்கையின், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அமெரிக்கா வழங்கும் நீடித்த ஆதரவு குறித்தும் சமந்தா பவர் இதன்போது கலந்துரையாடினார்.

ஜனநாயகத்தை பலப்படுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து பவருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக்கு சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பை பெறுவது தொடர்பிலும் எடுத்துரைத்தார். அத்துடன் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் தேவைப்படின் சர்வஜனவாக்கெடுப்பை நடத்தவும் தான் தயங்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (4)

## முடிந்தால்...

பீரிஸ் மேலும் கூறிய தாவது,

நாட்டில் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. ஆனால், இராஜாங்க அமைச்சு நியமனம் இடம்பெறுகின்றது. என்ன நடக்கின்றது எனத் தெரியவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள், அநாதரவாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகவே நாம் புதிய அரசியல் சக்தியை உருவாக்கியுள்ளோம். எமது முடிவில் எந்தத் தவறும் இல்லை.

கட்சியை விட்டு எங்களை நீக்கினால் நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம். முடிந்தால் நீக்கிக் காட்டுமாறு சவாலும் விடுக்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (4)

## மரக்கறிகளின்...

பட்டுள்ளதுடன், மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதாவது, குறித்த, இந்த நிலைமை காரணமாக விவசாயிகளுடன், சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஒரு கிலோகிராம் போஞ்சி 600 ரூபாவுக்கும், கரட் ஒரு கிலோ 400 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கறிமிளகாய் 800 ரூபாவுக்கும் கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 400 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் வெள்ளரிக்காய், பீர்க்கங்காய் மற்றும் மரவள்ளிக்கிழங்கு என்பவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதுதவிர, கடந்த போகத்துடன் ஒப்பிடும் போது, பெரிய வெங்காய பயிர்ச்செய்கைக்கு பாரிய செலவீனத்தை ஏற்க வேண்டியுள்ளதாக் பெரிய வெங்காய பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (4)

## அத்தியாவசிய...

அஜித் பி திலகரத்ன தெரிவித்துள்ளார்.

புற்று நோயாளிகள், சிறு நீரக நோயாளிகள், உயர் இரத்த அழுத்த நோயாளிகள், இதய நோயாளிகள் என பல நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துப் பற்றாக்குறையினால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகத் திணைக்களத்தில் தற்போது மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இன்னும் இரண்டு வாரங்களில் மற்றுமொரு மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் பற்றாக்குறையினால் அந்த நோயாளிகளின் உயிருக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

## திருக்கோணேஸ்...

யில் ஒன்று கூடிய சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த விடயம் தொட ர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பில் நல்லை ஆதீன முதல்வர், திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் பிரதி நிதிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், த.சித்தார்த்தன் ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து தெரி வித்தவர்கள் திருக் கோணேஸ்வரம் சைவத் தமிழ் மக்களின் சொத்து என்றும் இதைப் பாதுகாப்பதற்கு அரசியல்வாதிகள் உட்படசைவஅமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்துசெயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாராளுமன்ற வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதேவேளை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தை அபகரிப்பதற்குத் தொல்லியல் திணைக்களம்துணைபோவதாகக் குற்றம் சாட்டப்பட்டதுடன் மேற்படி ஆலய நில அபகரிப்பு உடனடியாக நிறுத்தப்பட்டாவிட்டால், மிகப் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (4,33,104)

## அடுத்...

தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் தொகுதிக்கான 'ஜயசமகிமாவத' விஷேட கூட்டம் நேற்று புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

1970 களில் எமது முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள். சீனி இல்லாமல் தேநீர் அருந்தினார்கள், மிளகாய் இல்லாமல் கறி சமைத்தார்கள். இது போன்றதொரு யுகத்தையே இன்று மொட்டுக் கட்சி உருவாக்கியிருக்கிறது.

ஆனால் இந்த நாட்டில் நாம் தனியாக ஆட்சி செய்ய எதிர்பார்க்கிறோம். இந்த வரிசை வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவர எதிர்பார்க்கிறோம். வானத்தை தொடும் வரை விலை அதிகரிப்பு ஏற்பட்ட போது மொட்டுக் கட்சியினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததைப் போல இல்லாமல், ஐக்கிய மக்கள் சக்தி அந்த நிலையிலிருந்து நாட்டை மக்களை பாதுகாக்கும் எனத் தெரிவித்தார். (4)


மஹஜன சம்பத
திகதி 2022/09/11
சீட்டிழுப்பு இலக்கம் 4875
V 1 5 8 5 4 8
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.09.11
சீட்டிழுப்பு இலக்கம் 184
மகரம் 06 09 32 47 மகரம்

மெகா பவர்
திகதி 11/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1223
K 03 04 15 28 79

கொவிசெத
திகதி 2022.09.11
சீட்டிழுப்பு இலக்கம் 3117
O 31 46 61 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.09.11
சீட்டிழுப்பு இலக்கம் -905
E 12 16 40 54

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1330
நீலம் 3 8 5 0 7 8
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1676
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,011,920/-
16 58 64 72 N

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.11
சீட்டிழுப்பு இல: 4011
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,049,160/-
01 42 63 70 D

சசிரி
சீட்டிழுப்பு இல: 221
சீட்டிழுப்பு திகதி: 2022.09.11
ஞாயிற்றுக்கிழமை
09 19 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,621,620/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,741,502.80
திகதி 2022-09-11
வெற்றி வாரம் 3562
03 06 21 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,344,520/-

25 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 03 22 40 55 76
1026
மஞ்சள்
2022.09.11
ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 259,894,855/-
011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1850
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.09.11
தினம் ஞாயிற்றுக்கிழமை
I 27 44 47 60
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,088,860/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் அராஜகம்

## ஜோசப் ஸ்டாலின்

(யாழ்ப்பாணம்)

ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ கும்பலுடன் இணைந்து போராட்டக்காரர்களை நசுக்குகின்ற வேலையில் ஈடுபடுகின்றார். போராட்டக்காரர்களை அடக்குவதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை கையில் எடுத்துள்ளார். இதற்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுப்போம் என இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதே ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் பாதிப்பு காரணமாக தற்போதும் 46 அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை பதிவேற்றியவர்களும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தற்போது கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் அவர்களது உண்ணாவிரத போராட்டத்திற்கு பூரண ஆதரவை தெரிவிக்கின்றோம். தமிழ் மக்கள் தரப்பிலிருந்து பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக குரல் எழுப்பப்பட்டு கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (4-104)

# கோழி இறைச்சியின் விலை மீண்டும் எகிற வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் கோழி இறைச்சியின் விலையை மீண்டும் உயர்த்த நேரிடும் என அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சாரம், நீர்க்கட்டணம் மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக இவ்வாறு எதிர்காலத்தில் கோழி இறைச்சியின் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்படும் என அந்த சங்கம் கூறியுள்ளது.

இதேவேளை, முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவது தொடர்பாக இன்று விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

எனினும், அரசு தலையிட்டால் கோழி மற்றும் முட்டை விலையை குறைக்க முடியும் எனவும் அவர் கூறினார். இந்த நிலையில், கால்நடை தீவனத்திற்காக சோளத்தை இறக்கு மதி செய்வதற்கான உரிமம் உரியவர்களுக்கு வழங்கப்படுவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமர வீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# இலங்கையில் குறைந்துள்ள மின்சாரப் பாவனை

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களில் மின்சார பாவனை குறைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் நாளாந்த மின்சார பாவனை 48 தொடக்கம் 49 மில்லியன் அலகுகளாக இருந்ததாக அந்த ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தற்போது அது 38 முதல் 39 மில்லியன் மின்சார அலகுகளாக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்த மின்துண்டிப்பு காரணமாக தற்போது மின்சார பாவனை குறைவடைந்துள்ளதாகவும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (4)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 03 1947

மறைவு 14 08 2022

அமரர்.

## வேலாயுதம் இராஜநாயகம்

(ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர்)

எமது குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் தந்தவர்கள், தொலைபேசியில் அழைத்து ஆறுதல்படுத்தியவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீர் அஞ்சலி பதாகைகளையும் பிரசுரங்களையும் அச்சிட்டு வழங்கியவர்கள், தேவையறிந்து சகல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்னாரின் இறுதிப் பயணத்தில் கலந்து கொள்ள வெளிநாட்டில் இருந்து வருகை தந்த அன்னாரின் உடன்பிறப்புக்கள், மைத்துனி, மருமக்கள், பெறாமகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் 13.09.2022 அன்று வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு இரங்கல் திருப்பலி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

வெள்ளாம் போக்கட்டி,
அல்லாரை.

குடும்பத்தினர்

(12752)


# இராசிபலன்

12.09.2022
ஆவணி 27, திங்கட்கிழமை
துதியை பிற்பகல் 2.06 மணிவரை

உத்திரட்டாதி முற்பகல் 10.03 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரம்

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பணிபுரியும் இடத்தில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தூரத்து உறவுகளின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்:** நண்பர்களினால் வளர்ச்சி கூடும் நாள், இல்லத்தில் இன்பங்கள் கூடும், பொது வாழ் வில் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள், கொள்கைப் பிடிப்பை தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், [illegible]

**தனுசு:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்களினால் நம்பிக்கை ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மீனம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

பகைமையை அன்பினால் வெல்லுங்கள், சோம்பலை ஊக்கத்தினால் வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### மனிதப் பிசாசுகள்

கேகய நாட்டில் ராஜபுரி என்ற சிறு கிராமம் இருந்தது. அதில் இருந்தவர்கள் ஏழைகளே. அவ்வூரின் மூன்று புறங்களில் பொட்டல் நிலங்களே இருந்தன. வடபுறம் மட்டும் சற்றுச் செழிப்பான நிலப் பகுதியாக இருந்தது. நீண்ட காலமாக அவ்வூருக்கு அது தான் விளை நிலமாக இருந்து வேலையும் உணவும் அந்த ஊர்க்காரர்களுக்கு அளித்து வந்தது. ஆனால் பன்னிரெண்டு ஆண்டுகளாக அங்கு பிசாசுகள் நடமாட்டம் இருப்பதாக எண்ணி ஊரார் பயந்து அங்கு போகாததால் அதில் முள்ளும் கள்ளியும் முளைத்து பயனற்றதாகியது.

அவர்கள் பயத்தை அதிகரிக்க இரவு வேளைகளில் பயங்கரக் கூச்சலும் தீவட்டிகள் நடமாட்டமும் இருக்கவே எல்லோரும் அங்கு கொள்ளிவாய்ப் பிசாசுகள் இருப்பதாக நம்பினார்கள். இரண்டொருவர் துணிந்து சென்றும் மறுநாள் அவர்களது உயிரற்ற உடல்கள்தான் கிடைத்தன. அதற்குப் பின் யாருமே அப்பகுதிக்குப் போகவில்லை.

அந்த கிராமத்திலிருந்து பார்த்திபன் என்ற இளைஞன் காசிக்குப் படிக்கச் சென்றிருந்தான். அவன் தன் படிப்பை முடித்துக் கொண்டு தன் ஊருக்கு வந்தான். அப்போது ஊர் இருந்த நிலையைப் பார்த்தான். பார்த்திபனுக்கு பேய் பிசாசுகள் என்பதில் நம்பிக்கை கிடையாது. மூடமக்கள் எப்படியோ பயந்து போய் அவை இருப்பதாக எண்ணி விடுகிறார்கள் என்பதே அவனது அபிப்பிராயம். அதனால் அவர்கள் பார்த்த கொள்ளி வாய்ப் பிசாசுகள் நடமாட்டத்திலும் பயங்கரக் கூச்சல்களிலும் ஏதோ மர்மம் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. அது என்ன என்று கண்டுபிடிக்க அவன் தீர்மானித்துக் கொண்டான்.

அவன் அன்றிரவு தன் வீட்டை விட்டு வெளியே வந்தான். தெருவில் சன நடமாட்டமே இல்லை. அவன் ஊரின் வடபுறம் நோக்கி நடந்தான்.

அங்கு தொலைவிலுள்ள ஆலமரத்தின் பக்கம் வெள்ளையான ஒரு உருவம் ஆடிக் கொண்டிருப்பது தெரிந்தது. அதனருகே திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. அடுத்து ஒரு பயங்கரக் கூச்சல் கிளம்பியது.

பார்த்திபனுக்கு அது விசித்திரமாக தோன்றியது. எனவே அவன் தன் வீட்டிற்கு வந்து அதுபற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். மறுநாள் அவன் மதிய உணவு உண்டு விட்டு ஒரு சில பொருட்களை மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு ஊராரிடம் தான் வேறு ஊருக்கு போகப் போவதாகக் கூறினான். அவர்களும் "இருட்டுவதற்கு முன்பே கிளம்பி அடுத்த ஊருக்குப் போய்விடு" என்று கூறினார்கள்.

பார்த்திபன் சூரியன் மேற்கில் மறையும் போது பிசாசுகள் நடமாடுவதாகக் கூறப்படும் இடத்தை அடைந்தான். அவன் தான் கொண்டு வந்த மூட்டையை எடுத்து அதிலிருந்த கறுப்பு ஆடைகளை அணிந்து கொண்டான்.

அதன் பின் மரத்தின் மீதேறி ஒரு பெரிய அகலமான கிளை மீது அமர்ந்து எடுத்து வந்த உணவை உண்டு விட்டு பிசாசுகள் வருகையை எதிர்பார்த்து விழித்திருந்தான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கவுந்தி அடிகளின் மனோதத்துவம்




கோவலனுக்கும் கண்ணகிக்கும் குவளைப் பூக்கள் சொல்லும் சேதி புரியவில்லை. அவை மெல்ல அசைந்து தங்களை வரவேற்பதாகவே நினைத்தார்கள்.

சிறிது தூரம் நடந்த அவர்கள் மதுரையின் புறநகரப் பகுதியை அடைந்தார்கள். தற்காலிகமாக ஓர் இடம் பார்த்துத் தங்கினார்கள்.

கோவலன் வியாபாரம் ஆரம்பிப்பது என்று முடிவு செய்தாயிற்று. என்ன வியாபாரம் என்று தேர்ந்தெடுக்க வேண்டுமே! அவ[illegible]டைய மூதாதையர்களில் தொடங்கி எல்லோருமே வியாபாரிகள். எதைச் செய்தாலும் நன்றாக யோசித்துப் பிறகுதான் முடிவு செய்வார்கள்.

எந்தப் பருவத்தில் எந்த ஊரில் என்ன விற்க வேண்டும்?, அதை எந்த ஊரில் என்ன விலைக்கு வாங்கவேண்டும்?, அதை வாங்கப்போகிறவர்களின் வாழ்க்கைத் தரம் என்ன? எவ்வளவு விலை வைத்தால் அவர்களால் அதை வாங்க முடியும்? அதே சமயம் நமக்கும் போதுமான இலாபம் இருக்குமா? என்பதையெல்லாம் தீர்மானிப்பதில் சமர்த்தர்கள். அந்தத் திறமை கோவலனுக்கும் இரத்தத்திலேயே இருந்ததில் ஆச்சரியமில்லை.

முதலில் மதுரை நகருக்குள் போய் அங்குள்ள மக்களின் தரம், வியாபார இடங்களின் தன்மை, என்ன கிடைக்கிறது, என்ன கிடைக்கவில்லை என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள நினைத்தான் கோவலன். கவுந்தி அடிகளும் அதனை ஏற்றுக் கொண்டார்.

கோவலன் கண்ணகியைக் கவுந்தி அடிகளிடம் ஒப்படைத்தான். 'பயணம் சிரமம் இன்றி இருக்க உங்கள் துணையும் வழிநடத்துதலும் மிகவும் உதவியாக இருந்தது உங்களை மேலும் சிரமத்துக்கு உள்ளாக்க மனம் சங்கடப்படுகிறது. ஆனால், நான் இப்போது நகருக்குள் போய்வரவேண்டும். அதுவரை கண்ணகியை உங்கள் பொறுப்பில் விட்டுப்போவதில் உங்களுக்கு ஆட்சேபம் எதுவும் இல்லையே?' என்று பணிவோடு கேட்டான். 'அடிகளே என் தவறுகளால் ஏற்பட்ட துன்பங்களுக்கு உங்களையும் ஆட்படுத்துகிறேனா?' கவுந்தி அடிகள் கோவலனை நிமிர்ந்து பார்த்தார். அவன் கண்களில் குற்ற உணர்வு தெரிந்தது.

'முற்பிறப்பின் நல்வினைக் குறைவால்தான் மனைவியைப் பிரிதல், காதலியுடன் களித்தல், அவளைப் பிரிதல் உள்ளிட்ட துன்பங்களை நீ அனுபவிக்க நேர்ந்தது' என்று சொல்லி நிறுத்தினார் கவுந்தி அடிகள்.

கவுந்தி அடிகளின் அளவில்லாத மனிதநேயம், தீவினை என்பதைக் கூட நல்வினைக் குறைவு என்றுதான் சொல்ல வைத்தது. இது கோவலனின் மனத்தைத் தொட்டது அவர் மேலும் என்ன சொல்லப் போகிறார் என்பதை கவனமாகக் கேட்டான்.

'உணவும் பெண் இன்பமுமே சுகம் என்று வாழ்கிறவர்கள் ஏகப்பட்ட துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அப்படி இருப்பவர்களுக்குப் பெரியவர்கள் எத்தனை அறிவுரைகள் சொன்னாலும் மயக்கத்தின் காரணமாக அவர்கள் அதை எடுத்துக்கொள்வதில்லை. பின்னர் துன்பம் அனுபவிக்கிற போதுதான் உணர்வார்கள் இது உலக வழக்கம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 74

### கிழக்கு உக்ரைனில் மோதல்கள்

முன்னர் கூறியது போல் மார்ச் 2014 இல், மைதான் எழுச்சி (எதிர்ப்பு) இயக்கம் மற்றும் அதன் விளைவாக உருவான கண்ணியப் புரட்சியைத் தொடர்ந்து, ரஷ்ய சார்பு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் பதவியில் இருந்து அகற்றப்பட்டார். இந்நடவடிக்கைக்கு எதிரான சீற்றத்தால், டான்பாஸின் பெரும் பகுதியில் உக்ரைன் அரசாங்கத்திற்கு எதிராக ரஷ்ய சரர்பு மக்களால் அமைதியின்மை ஏற்பட்டது.

ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்து இணைத்த சிறிது நேரத்திலேயே கிழக்கு உக்ரைனில் பிரிவினைவாத கிளர்ச்சியாளர்கள் தோன்றத் தொடங்கினர். ஏப்ரல் 2014 இல் உக்ரைனிய இராணுவத்திற்கும் ரஷ்ய ஆதரவு உக்ரைனிய பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே குறைந்த அளவிலான சண்டையுடன் தொடங்கியது. கிளர்ச்சியாளர்கள் பெரும்பாலும் ரஷ்ய மொழி பேசும் மக்கள் வசிக்கும் கிழக்கு உக்ரைனில் உள்ள ஸ்லோவியன்ஸ்க் மற்றும் தோனேஸ்க் போன்ற சில நகரங்களைக் கைப்பற்றினர்.

தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாநிலங்களின் சில பகுதிகளைக் கைப்பற்றிய பிரிவினைவாத குழுக்கள் அவற்றை தோனேஸ்க் மக்கள் குடியரசு மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசு என்று அறிவித்தனர். அத்துடன் டான்பாஸில் உள்ள பல அரசாங்க கட்டடங்களை கைப்பற்றினர். இது உக்ரைனிய அரசாங்கப்படைகளுடன் ஆயுத மோதலுக்கு வழிவகுத்தது.

ஆரம்ப எதிர்ப்புக்கள் பெரும்பாலும் புதிய உக்ரைனிய அரசாங்கத்தின் மீதான அதிருப்தியின் சொந்த வெளிப்பாடாக இருந்த போதிலும், உக்ரைனுக்கு எதிராக ஒருங்கிணைக்கப்பட்ட அரசியல் மற்றும் இராணுவ பிரசாரத்தைத் தொடங்க ரஷ்யா அவற்றைப் பயன்படுத்திக் கொண்டது.

ரஷ்ய குடிமக்கள் ஏப்ரல் முதல் ஓகஸ்ட் 2014 வரை தோனேஸ்க்கில் பிரிவினைவாத இயக்கத்தை வழிநடத்தினர், மேலும் ரஷ்யாவிலிருந்து தன்னார்வலர்கள் மற்றும் பொருட்களால் பிரிவினைவாதிகள் ஆதரிக்கப்பட்டனர்.

மே 2014 இல் மோதல் தீவிரமடைந்ததால், ரஷ்யா ஒரு "கலப்பின அணுகுமுறையை" பயன்படுத்தியது, தவறான தகவல் வழங்கல், முறைசாரா படைகள் , வழக்கமான ரஷ்யத் துருப்புக்கள் மற்றும் டான்பாஸை சீர்குலைக்க வழக்கமான இராணுவ ஆதரவு ஆகியவற்றின் கலவையை பயன்படுத்தியது.

பின்னர் இப்பிரச்சினை ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் அறிவிக்கப்படாத போராக தீவிரமடைந்தது.

**கிளர்ச்சியாளர்களுக்கு சில உள்ளூர் ஆதரவு இருந்தாலும் கிளர்ச்சியாளர்கள் ஆயுதம் ஏந்தியதோடு ரஷ்ய அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டனர்.**

மிக முக்கியமான கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான இகோர் ஸ்ட்ரெல்கோவ் கிர்கின் ஒரு ரஷ்ய குடிமகன் மற்றும் இராணுவ வீரர் ஆவார், அவர் கிளர்ச்சியாளர்களை வழிநடத்தத் தொடங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்பு ரஷ்யாவின் உட்பாதுகாப்பு சேவைகளில் இருந்து ஓய்வு பெற்றவர் ஆவார்.

அதற்குக் காரணம் நடவடிக்கையின் காரணமாக ஏற்படும் எந்தவொரு மரணத்திற்கும் உக்ரைனிய அரசாங்கத்தையே குற்றம் சாட்டுவேன் என்று புடின் குறிப்பிட்டார். இது மறைமுகமாக கிழக்கு உக்ரைனின் ரஷ்ய மொழி பேசும் குடிமக்களைப் பாதுகாப்பதற்காக படையெடுப்பேன் என்ற கருத்துப்பட மிகவும் நுட்பமாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எவ்வாறு இருந்தாலும் அனைவரும் சமாதான உடன்படிக்கைக்கு பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர்.

**உக்ரைன் ஏப்ரல் 2014 இல் ரஷ்ய-சார்புப் படைகளுக்கு எதிராக இராணுவ எதிர் தாக்குதலைத் தொடங்கியது. 2014 முதல் 2018 வரை "பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை" என்று அழைக்கப்பட்டது. அதன்பின் அது "கூட்டுப்படைகள் நடவடிக்கை" என மறுபெயரிடப்பட்டது.**

ஓகஸ்ட் 2014 இன் பிற்பகுதியில், இந்த நடவடிக்கையானது ரஷ்ய சார்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசத்தை பெருமளவில் சுருக்க முடிந்தது மற்றும் ரஷ்யா-உக்ரைன் எல்லையின் கட்டுப்பாட்டை மீட்டெடுப்பதற்கு ஏற்றநிலை உருவாகியது.

பதிலுக்கு, ரஷ்யா அதன் கலப்பின அணுகுமுறையை கைவிட்டு, டான்பாஸ் மீது வழக்கமான படையெடுப்பைத் தொடங்கியது. 2014 ஓகஸ்ட் 22 மற்றும் 25 க்கு இடையில் ரஷ்ய எல்லையில் இருந்து உக்ரைனிய நிலைகள் மீது ஷெல் தாக்குதல்கள் நடந்தன.

(தொடரும்)

# ஆப்கானிஸ்தான் தலைநகரில் அடுத்தடுத்து இரு குண்டுவெடிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் மேற்கில் உள்ள தஷ்ட்-இ-பார்ச்சி பகுதியை நேற்று முன்தினம் சனிக்கிழமை உலுக்கிய இரண்டு குண்டுவெடிப்புகளில் 5 பேர் வரை காயமடைந்ததாக காபூல் நகர பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காலித் சத்ரான் தெரிவித்தார்.

இந்த குண்டுவெடிப்புகளுக்கு எந்த ஒரு குழுவோ அல்லது தனிநபரோ பொறுப்பேற்கவில்லை. இதுகுறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாக காலித் சத்ரான் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தான் மேற்கு ஹெராத் நகரில் உள்ள ஒரு மசூதிக்கு வெளியே சில நாட்களுக்கு முன்பு நடந்த பயங்கர குண்டுவெடிப்பில் ஒரு புகழ்பெற்ற மதகுரு உட்பட 18 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 23 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு கடும்போக்காளர் டேஷ் அல்லது ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# அரசியல் கொள்கைகளை நிலைநாட்டுவேன்

## மன்னர் சார்லஸ் உறுதி

(லண்டன்)



மறைந்த தமது தாயாரான எலிசபெத் மகாராணி, 7 தசாப்தங்களுக்கும் மேலாக விசுவாசத்துடனும் மரியாதை மற்றும் அன்புடன் சேவை செய்ததாக பிரித்தானிய மன்னர் சார்லஸ் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது எலிசபெத் காலமானதை அடுத்து மன்னராக நியமிக்கப்பட்ட சார்ல்ஸ், முதன் முறையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அசைக்க முடியாத பக்தியுடன் செயற்பட்ட மகாராணியைப் போன்று தானும் எஞ்சிய காலம் முழுவதும் தேசத்தின் அரசியலமைப்புக் கொள்கைகளை நிலைநிறுத்த உறுதியளிப்பதாக சார்லஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தனது மூத்த மகன் வில்லியமை புதிய இளவரசராக நியமித்துள்ளதாகவும் சார்லஸ் இதன்போது அறிவித்துள்ளார். (4)

# உக்ரைன், நட்பு நாடுகளுக்கு 2.6 பில்.டொலர் இராணுவ உதவி

## அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

உக்ரைன் மற்றும் நட்பு நாடுகளுக்கு 2.6 பில்லியன் டொலர்கள் உதவிக்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

இதில், தற்போது ரஷ்யாவுடன் போரிட்டு வரும் உக்ரைனுக்கு 675 மில்லியன் மதிப்பிலான ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

ஜேர்மனியின் ராம்ஸ்டீனில் உள்ள அமெரிக்க விமானத்தளத்தில் பலநாட்டு சக அமைச்சர்களுடனான சந்திப்பில் பாதுகாப்பு செயலாளர் லோயிட் ஆஸ்டின் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த உதவியில் ஹோவிட்சர்கள், வெடிமருந்துகள், ஹம்வீ வாகனங்கள், கவச அம்புலன்ஸ்கள் மற்றும் யுத்த தாங்கி எதிர்ப்பு அமைப்புகள் ஆகியவை அடங்கும்.

அமெரிக்கா ஏற்கனவே உக்ரைனுக்கு 13 பில்லியன் டொலர்கள் இராணுவ உதவியை உறுதியளித்துள்ளது.

உக்ரைன் மற்றும் அதன் 18 அண்டை நாடுகளின் பாதுகாப்பை வலுப்படுத்த முதலீடுகள் வடிவில் நீண்ட கால உதவியாக 2.6 பில்லியன் டொலர்களை பைடன் நிர்வாகம் ஒதுக்கியுள்ளது. இதில் நேட்டோ உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அல்லாதவர்கள் எதிர்காலத்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பு அபாயத்தில் உள்ள நாடுகளும் அடங்கும். (4)

# நைஜீரியாவில் விபத்து 20 பேர் தீயில் பலி

(அபுஜா)

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியா நாட்டின் தென்கிழக்கே உள்ள ஒயோ மாகாணத்தின் இபரபா நகரில் உள்ள நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பேருந்தும் சாலையின் மறுபுறம் வேகமாக வந்த காரும் மோதி விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்தில் காரும் பேருந்தும் தீப்பிடித்து எரிந்தன.

இதனால் கார் மற்றும் பேருந்துக்குள் பலர் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்த மீட்புக்குழு சம்பவ இடத்திற்கு வருகை தந்து மீட்பு பணியில் ஈடுபட்டது. இந்த விபத்தில் சுமார் 20 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மா சார்ந்த பொருட்களின் விலை அதிகரிப்பை நிறுத்துங்கள்

## வெதுப்பக வர்த்தகர்களிடம் அரசு கோரிக்கை

**(கொழும்பு) பாண் மற்றும் கோதுமை மா சார்ந்த பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கான திட்டத்தை நிறுத்துமாறு வெதுப்பக வர்த்தகர்களுக்கு வர்த்தக அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.**



துருக்கி மற்றும் துபாயில் இருந்து கடன் அடிப்படையில் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டுத் தேவைகள் காரணமாக ஏற்றுமதி செய்வதில்லை என்ற முடிவைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வர்த்தக மா இறக்குமதிக்கான கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் வரை அடுத்த இரண்டு வாரங்களுக்கு விலை அதிகரிப்பை தடுத்து நிறுத்துமாறு வெதுப்பக உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு பாண் மற்றும் மா அடிப்படையிலான பொருட்களின் விலையை அதிகரிக்க வெதுப்பக உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4)

# நாணய நிதிய அறிக்கை தொடர்பான விவாதம் அவசியம்

## எதிர்க்கட்சி மீண்டும் கோரிக்கை



(கொழும்பு) சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பில் பாராளுமன்ற விவாதம் அவசியம் என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை மீண்டும் விடுப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு முன்னதாக இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்துள்ளார். (4)

# மகாராணியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளவுள்ளார் ரணில்

(கொழும்பு) இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வார இறுதியில் பிரித்தானியாவுக்குச் செல்லவுள்ளார்.

இதற்காக ஜனாதிபதி செயலகம், லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துடன் பயணத்திற்கான ஒருங்கிணைப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மகாராணியாரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இலங்கை அரசு அன்றைய தினத்தை தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது இந்த குறுகிய கால விஜயத்தின் போது பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளை சந்திக்க வாய்ப்புள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (4)

# வெளிநாடு செல்ல முற்பட்ட 85 பேர் திருமலையில் கைது

(திருமலை) சட்டவிரோதமாக கடல் வழியாக வெளிநாடு செல்ல முற்பட்ட 85 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பலநாள் மீன்பிடிப் படகுகளின் உதவியுடன் இவ்வாறு செல்ல முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 18 வயதுக்கு மேற்பட்ட அறுபது ஆண்கள், பதினான்கு பெண்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட பதினொரு சிறார்கள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த குழுவும் பல நாள் மீன்பிடிப் படகும் தற்போது திருகோணமலை துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (4)

# ஐ.ம.ச உறுப்பினர்கள் ஜெனிவா பயணம்

(கொழும்பு) இன்று ஆரம்பமாகவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலவரத்தை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் பேரவையில் இந்த கூட்டத்தொடர் இலங்கைக்கு பாரிய நெருக்கடியினை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகின்றது. (4)

# அரசாங்கத்தின் கடன் வட்டி பாரியளவில் உயர்வு

(கொழும்பு) அரசாங்கத்தின் கடன் வட்டி 26,300 கோடி ரூபாய் வரை உயர்ந்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சின் சமீபத்திய புள்ளி விபரங்களுக்கமைய, வங்கி வட்டி விகித உயர்வு மற்றும் ரூபாவின் மதிப்பு தொடர்ந்து சரிவதால் இந்த ஆண்டு அரசின் கடன் வட்டி செலவு அதிகரித்துள்ளது.

திறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம் 30 வீதத்தை தாண்டியமையும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

மேலும் ஒரு டொலருக்கான ரூபாவின் பெறுமதி 203 ரூபாவிலிருந்து 360 ரூபாவாக அதிகரித்தமையும் கடன் வட்டிச் செலவில் இவ்வளவு பெரிய தொகை அதிகரிப்பதற்குக் காரணங்களாக குறிப்பிடப்படுகின்றன. (4)

# விபத்து; ஒருவர் உயிரிழப்பு

## அறுவர் படுகாயம்

(குருநாகல்) கெப்பட்டிபொல-பெலுன்கல பிரதேசத்தில் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளதாக கெப்பெட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது வாகனத்தில் பயணித்த 7 பேர் காயமடைந்து வெலிமடை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதுடன், ஆபத்தான நிலையில் இருந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல் ரிதிகம பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹகும்புர பிரதேசத்தில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டமையே இந்த விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (4)

# வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு) வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடத்தில் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 772 இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலைக்காக சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாடு செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர் என்பதோடு ஒரு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள் வெளிநாடு சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 5 ஆயிரம் தொழிலாளர்களை கொரியாவுக்கு வேலைக்கு அனுப்ப எதிர்பார்த்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## களவு நிறைந்த நாட்டில் செல்வம் எங்ஙனம் செழிக்கும்

இலங்கை வளமும் வனப்பும் பொருந்திய நாடு என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

ஆனால் ஆட்சித் தரப்பின் அநியாயமும் பெரும்பான்மை இனம் சார்ந்தவர்களின் இனவாதமும் மதவாதமும் சேர்ந்து நாட்டைச் சீரழித்துவிட்டன.

இதன் காரணமாக இப்போது பசியும் பட்டினியும் வறுமையும் மலிந்த நாடாக இலங்கை மாறிவிட்டது.

இதிலிருந்து எப்போது நாடு மீளும் என்று ஏங்கித் தவிக்கும்போதெல்லாம் எதிர்வரும் காலங்கள் இலங்கைக்கு இன்னும் பெரும் சவாலாக இருக்குமென உலகப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆரூடம் கூறுகின்றனர்.

ஆக, வளம் பொருந்திய நாடாக இலங்கை மாறுவதற்கு மிக நீண்ட காலம் எடுக்கலாம்.

சிலவேளை பஞ்சமும் பசியும் பட்டினியும் தலைவிரித்தாட, இனி இங்கு வாழ முடியாது என்ற நிலைமையும் ஏற்படலாம்.

இவை ஒருபுறமிருக்க, வறுமை என்பது தீராப் பிணியன்று. ஆட்சியாளர்களின் தூர நோக்கும் மக்களின் கடும் முயற்சியும் தனவந்தர்களின் முதலீடுகளும் மகா இலட்சுமியின் வாசமும் இருந்தால், வறுமை தானாக அகன்று செல்வம் தழைத்தோங்கும்.

ஆனால் வறுமைப் பிணி கொண்ட நாட்டில் களவும் கொள்ளையும் தலைவிரித்தாடுமாக இருந்தால், அந்த நாடு ஒருபோதும் உருப்படாது என்பதுதான் உண்மை.

இதனாலேயே

***களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும்***

என்றார் வள்ளுவர்.

ஆம், இப்போது இங்கு களவும் கயமைத்தனமும் கண்டபாட்டில் பெருகிவிட்டன.

செல்வத்தை சேர்த்து வைத்திருக்க முடியாது. எந்தத் தொழில்முயற்சிகளைச் செய்தாலும் அதனைக் கள்வர் கூட்டம் கபளீகரம் செய்து விடுகின்றது.

வீடு உடைத்து களவெடுப்பது சர்வசாதாரணமாயிற்று.

இதற்கு மேலாக, வழிப்பறிக் கொள்ளைகள் தாராளமாகிவிட்டன.

நிலைமை இதுவாக இருக்கும்போது, செல்வந்தர்கள் இந்த நாட்டைவிட்டு முதலில் வெளியேறுவர்.

நாடு என்றால் அங்கு தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த நாடு வளம் பெருக்கும் நாடாக இருக்கும்.

மாறாக, நாட்டைவிட்டு செல்வந்தர்கள் வெளியேறினால் எதுவும் இல்லை என்பது தான் மிஞ்சும்.

ஆகையால் அரசாங்கமும் பொலிஸாரும் களவை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

இல்லையேல் பசிப் பிணிக்கு மேலாக களவு என்ற அச்சமும் சேர்ந்து மக்களைக் கொன்றுவிடும்.

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சி

## பப்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்வேறு விடயங்களை முன்வைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒரு முறை ஒத்திவைக்க அரசாங்கம் தயாராகி வருவதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பப்ரல்) குற்றஞ்சுமத்தியுள்ளது.

இந்நிலையில், தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருவதாக பப்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் உள்ளிட்ட தேர்தலை ஒத்திவைப்பதற்கு தாம் ஆதரவாக இல்லை என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் மக்களின் இறைமைக்கு பாரிய சேதம் ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு நம்புவதாகவும் 20 ஆம் திகதிக்குப் பிறகு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# அரசியல் தீர்வு கோரி

## யாழ். மயிலிட்டியில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் போராட்டத்தின், 42 ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம், யாழ்ப்பாணம் மயிலிட்டியில் இடம்பெற்றது.

'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப் பொருளில், வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெறும் செயல்த் திட்டத்தின், 42 ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், நேற்று காலை 10.30 மணியளவில், மயிலிட்டி கடற்கரை துறைமுகம் அருகில் இடம்பெற்றது.

இதில், கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழு பணியாளர்கள் பங்கேற்றனர்.

திட்டத்தில் பங்கேற்ற மக்களால், 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டதுடன், வருகை தந்த மக்களுக்கு, அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான், சாதக பாதக விளைவுகள் தொடர்பாக, சட்டத்தரணி சிவஸ்கந்தசிறி தெளிவுபடுத்தினார்.

அத்துடன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ கீருத்துக்களை வழங்கினார்.

இதன் போது, அரசியல் தீர்வு விடயத்தில், மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள்வாங்கப்பட்டது. (4-104)

## காணிப் பிணக்கால் கைகலப்பு தம்பிக்கு எமனான அண்ணன்

(மாத்தறை)

மாத்தறை அக்குரஸ்ஸ, மடோல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நபர் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரு சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட காணி தகராறு, கைகலப்பாக மாறியதில், அண்ண்னன் தம்பியை கூரிய ஆயுதத்தால் தாக்கிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணி தொடர்பான தகராறு தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறி சென்றதையடுத்து மூத்த சகோதரர் கூரிய ஆயுதத்தால் தம்பியை தாக்கியுள்ளார்.

குறித்த தாக்குதலில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அக்குரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# கடந்த 8 மாதங்களில் 500 வைத்தியர்கள் வெளிநாடு பறந்தனர்

கடந்த 8 மாதங்களில் சுமார் 500 இலங்கை வைத்தியர்கள் வெளிநாடு சென்றுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அச்சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலைமை பாரதூரமான விடயம் எனவும் கடந்த இரண்டு மாதங்களில் வெளிநாடு சென்ற வைத்தியர்கள் பலர் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்காமல் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன் காரணமாக இராஜினாமா அறிவித்தல் விடுத்துள்ள வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் அதிகமாக உள்ளதாக வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டார்.

வைத்தியர்கள் நாட்டை விட்டு செல்வது நாட்டின் சுகாதாரத் துறையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார். (4)

# தேர்தல் முறைமை தொடர்பில் பொதுசன வாக்கெடுப்பு

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

தேர்தல் முறைமை குறித்த இணக்கப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாவிட்டால் பொதுசன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் கருத்து கோரப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாரிய மறுசீரமைப்புக்காக இவ்வாறு பொதுசன வாக்கெடுப்புக்கு செல்ல தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** பலாலி விமானப்படை, விமான நிலையம்- பலாலி, பலாலி இராணுவ முகாம், மயிலிட்டி 515 படைப்பிரிவு இராணுவ முகாம், மயிலிட்டி இராணுவ முகாம், மயிலிட்டி மீன்பிடி துறைமுகம், மயிலிட்டி, பலாலி விமானப்படை தங்கு விடுதி, விமான நிலைய சந்தி, பலாலி மயிலிட்டி பம்ப்ஹவுஸ், மயிலட்டி வி.சி.டச்சு வீதி, சாந்தை, தையிட்டி, வள்ளுவர் புலம், வசாவிளான் நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர் வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணை சந்தி, சுருவில் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேராவில் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்

## சபைநிதி வேலைத்திட்டம் - 2022

01 தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02 தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப் படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016 ( iii ) ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமை யளிக்கப்படும்.

03 இல 1-21 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் ( Black List ) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இல 22 கேள்விகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தாரராகக் காணப்பட வேண்டும்.

04 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட் டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ( தொலைபேசி **021 224 0017** ) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 12.09.2022 தொடக்கம் 26.09.2022ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 12.09.2022 திகதியிலிருந்து 26.09.2022ஆம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07 பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 27.09.2022ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம்** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடி யாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08 கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09 கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட் டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம், ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | காளி கோவில் வீதி, சிற்பி ஒழுங்கை, நாகம்மாள் 3ம் வீதி மற்றும் தம்பிமுத்து உபாத்தியார் 4ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/19 | 0.956 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 10,000.00 | 13.12.2022 |
| 2 | வடலி அம்மன் கோவில் முன் வீதி மற்றும் புகையிரத நிலைய குறுக்கு வீதி - மிகுதி NP/14/41/15/02(05)/CF/2022/20 | 1.803 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 19,000.00 | 13.12.2022 |
| 3 | உடுவில் தேவாலய வீதி (2ம் குறுக்கு) உடுவில் வடக்கு மற்றும் கந்தையா உபாத்தியார் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/21 | 1.174 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 12,000.00 | 13.12.2022 |
| 4 | செபமாதா கோவில் குறுக்கு வீதி, உதயசூரியன் 8ம் குறுக்கு வீதி மற்றும் அம்பலவாணர் 4, 5ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/22 | 1.668 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 17,000.00 | 13.12.2022 |
| 5 | ஆலடி முகாமிற்கு அருகில் உள்ள வீதி, பூதரார் வீதி கந்தரோடை NP/14/41/15/02(05)/CF/2022/23 | 1.070 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 11,000.00 | 13.12.2022 |
| 6 | யஸ்ரின் சின்னப்பு வீதி, உதய சூரியன் 4ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/24 | 0.748 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 8,000.00 | 13.12.2022 |
| 7 | கே.கே.எஸ். வீதி 3ம் ஒழுங்கை (சம்பத் முன் வீதி), முத்துக்கிருஸ்ணர் 3ம் குறுக்கு வீதி, சுன்னாகம் புத்தூர் குறுக்கு வீதி மற்றும் பூவோடை 8ம் ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2022/25 | 2.075 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 21,000.00 | 27.12.2022 |
| 8 | சூளானை வைரவர் வீதி மற்றும் சிவபூதவராயர் வீதி 1ம், 9ம் ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2022/26 | 2.215 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 23,000.00 | 27.12.2022 |
| 9 | ஞானவைரவர் வீதியின் கிளை வீதிகள், புகையிரத நிலைய வீதியின் கிளை வீதிகள் மற்றும் அங்களப்பாய் வீதியின் கிளை வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/27 | 2.820 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 29,000.00 | 27.12.2022 |
| 10 | அம்மன் வீதி 1, 2, 3, ம் குறுக்கு வீதி, மல்வம் குறுக்கு வீதியின் உப ஒழுங்கை, கறுத்தான்வடலி 1, ம் | 2.132 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 22,000.00 | 27.12.2022 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

( C-4898)

( 11 ஆம் பக்கம் பார்க்க )

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறுக்கு வீதி மற்றும் புதுமடம் தேவாலய பின் வீதியின் குறுக்கு ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2022/28 | | | | | | | |
| 11 | தாவடி சக்கடத்தார் உப வீதி, தாவடி மானிப்பாய் 12ம்உப வீதி மற்றும் த்வறணை கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2022/29 | 1.440 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 15,000.00 | 13.12.2022 |
| 12 | வன்னியசிங்கம் வீதி கிளை வீதி, முதலி கோவில் 1, 2ம் கிளை வீதிகள் மற்றும் பாணாப்பாய் வீதியின் 2ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/30 | 2.018 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 21,000.00 | 27.12.2022 |
| 13 | அந்திரான் உப ஒழுங்கை, செட்டித்தோட்டம் 2ம் ஒழுங்கை மற்றும் துரையன்தோட்டம் உப ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2022/31 | 2.365 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 24,000.00 | 27.12.2022 |
| 14 | மானிப்பாய் பிரதான வீதி 5ம் குறுக்கு வீதி மற்றும் மாரியப்புலம் குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/32 | 1.166 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 12,000.00 | 13.12.2022 |
| 15 | கற்கரைப்பிள்ளையார் முன் வீதி, கற்கரைப்பிள்ளையார் ஊரங்குனை வீதி 2ம் கிளை வீதி மற்றும் குப்பிளான் மயிலங்காடு குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/33 | 1.951 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 20,000.00 | 13.12.2022 |
| 16 | திடற்புலம் மயானத்திற்கு அருகாமையில் உள்ள வீதியின் குறுக்கு வீதி, சுன்னாகம் புத்தூர் வீதியின் சந்திக்கு அருகாமையின் 2ம் குறுக்கு வீதி மற்றும் குப்பிளான் கேணியடி விவசாய குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/34 | 0.747 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 8,000.00 | 13.12.2022 |
| 17 | புளியங்கிணற்றடி உப வீதி, துர்க்கா ஸ்ரோர் முன் வீதி - மிகுதி வேலை, உயிலடி 1ம் குறுக்கு வீதி – மிகுதி, வரிசயப்புலம் குறுக்கு வீதி மற்றும் ஒன்றிய முன் வீதி - கொங்கிறீட் NP/14/41/15/02(05)/CF/2022/35 | 1.511 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 16,000.00 | 13.12.2022 |
| 18 | சைவமகாஜனா 5 குறுக்கு வீதி, காளிகோவில் வீதி, சாடியடி குறுக்கு வீதி மற்றும் பூதவராயர் வீதி (சிவகுரு கிளை வீதி) NP/14/41/15/02(05)/CF/2022/36 | 1.455 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 15,000.00 | 13.12.2022 |
| 19 | சைவமகாஜனா 6ம் குறுக்கு வீதி, காளி கோவில் உப ஒழுங்கை மற்றும் முத்துமாரி அம்மன் 2ம், 3ம் 5ம் 6ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/37 | 2.149 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.11.2022 | 22,000.00 | 27.12.2022 |
| 20 | தம்புவத்தை 5ம் குறுக்கு வீதி, இலங்கையர்கோன் 4ம் குறுக்கு வீதி மற்றும் மில் வீதி 3ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/38 | 0.561 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 6,000.00 | 13.12.2022 |
| 21 | வேலவளவு 2ம் குறுக்கு வீதி, வேலவளவு கோட்டைக்காடு இணைப்பு குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/39 | 0.600 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 6,000.00 | 13.12.2022 |
| 22 | Supply and Installation of Desktop Computer NP/14/41/15/02(05)/CF/2022/40/ Desktop-01 | 3.450 | 90 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 63 நாட்கள் | 29.11.2022 | 34,500.00 | 27.12.2022 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 19.09.2022ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

**க.தர்சுஷன்,**
**தவிசாளர், பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

( C-4898) **12.09.2022**

# போதைப்பொருள் விற்பனை கிளிநொச்சியில் அதிகரிப்பு

## · பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பாரதிபுரம், இரணைமடுச் சந்தி ஆகிய பகுதிகளில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரதிபுரம், இரணைமடுச்சந்தி ஆகிய பகுதிகளில் போதைப் பொருள், கஞ்சா பயன்பாடுகளின் விற்பனைகள் அதிகளவில் காணப்படுகின்றது. இதனால் இப்பகுதியில் கூடுதலான இளைஞர்கள் கஞ்சா பயன்பாட்டிற்கு அடிமையாகி காணப்படுவதுடன் பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் போதைப்பொருள், கஞ்சா குற்றச்சாட்டுக்களுடன் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டவர்களில் அதிகளவானோர் பாரதிபுரம், இரணைமடுச்சந்தி, சாந்தபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே இதனைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வசதி இன்றி துணுக்காய் பிரதேச மக்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோட்டைகட்டிய குளம் மற்றும் அம்பலப்பெருமாள்குளம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் குறித்த கிராமங்களில் வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு உள்ளிட்ட பகுதிகளுக்கான பிரதான வீதியாகக் காணப்படும் துணுக்காய், அம்பலப் பெருமாள் சந்தி வரைக்குமான வீதி கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் எந்த வாகனங்களும் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தருமாறு எத்தனையோ தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் எந்த விமோசனமும் இல்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மருத்துவமனைகள், மேலதிக கல்வி வசதிகள், உயர்தர வகுப்புக்கள் உள்ளிட்ட எந்தத் தேவைக்கும் கிளிநொச்சிக்கு செல்ல வேண்டி இருப்பதனால் பிரதான வீதிகளை புனரமைத்து தருவதுடன் தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-315)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12761)

தொடர்புகளுக்கு:- 076 755 8606, 077 911 6983



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12761)

077 658 5999, 076 436 5814, 077 874 8135



## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

மஞ்சவனப்பதி முருகன் ஆலய இந்து இளைஞர்கள் நடாத்தும்

20வது தின அலங்கார உற்சவம் – 2022

காலம்: இன்று (12.09.2022) திங்கட்கிழமை மாலை 7 மணி

விசேட நிகழ்வு:




ஈழத்தின் புகழ் நாதஸ்வர வித்துவான் கே.பி. குமரன் குழுவினர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மஞ்சவனப்பதி முருகன் ஆலய இந்து இளைஞர்கள்

விளம்பர அனுசரணை:- ஸ்ரீ குகன் பான்சி

(12755) இல.52, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். 077 611 6663


# வட மாகாண கல்வி அமைச்சுக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், வட மாகாண கல்வியமைச்சின் பூரண கட்டுப்பாட்டின் கீழ், சட்டவரையறைகளை மீறாத வகையில், வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் கடந்த வாரம் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

குறித்த முறைப்பாட்டுக்கு நாளை மறு தினத்துக்குள் விளக்கமளிக்குமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் திரு.கனகராஜ் மின்னஞ்சல் மூலம் வட மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார். (4,33,104)

## 6ஆவது...

2022ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ணத்தினை இலங்கை அணி 6ஆவது தடவையாகவும் கைப்பற்றியது.

டுபாய் சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இறுதிப்போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களை எடுத்து 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (4)


## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரை அண்டிய சிற்றுண்டிச்சாலைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்)

(12763)

077 275 9799



## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4881)

!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும்- 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-4881)

எமது கிளைகள்: கிளிநொச்சி • கண்ணாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4881)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



## EDUS Law College Entrance Exam

Learning made lovable

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை

தொடர் வழிகாட்டல் கருத்தரங்கு



- Aptitude — R.Thiraviyaraj, SLAS
- English — S.M.B.M.Arshad, Dip.in.English,HDIR,BA ELT,MA TESL
- Comprehension — A.K.Keerthirajan, M.A in Tamil
- General Knowledge — A.M Riyas, SLTS in Journalism

ஆரம்பம் September 15 2022

- முன்னோடி ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டல்..!
- முக்கிய குறிப்புகளும் கையேடுகளும் வழங்கப்படும்..!
- குழப்பமில்லாத நேரசூசி..!
- அனைவருக்கும் பொருத்தமான நேரங்களில் தனிப்பட்ட கவனத்துடன் கூடிய வகுப்புக்கள்..!

(C-4897)

www.edus.lk 0777 123 330 Enroll Now



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12764)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

(12753)

தொடர்பு: றாஜ் - 077 679 6623


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.